**செ.வெ.எண்: 41** **நாள்:19.09.2016**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.3,99,208 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.09.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கூறியதாவது.

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாவட்டந்தோறும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பட்டா மாறுதல் கோரி 14 மனுக்களும், புதிய குடும்ப அட்டை கோரி 04 மனுக்களும், காவல்துறை நடவடிக்கைக்காக 19 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 12 மனுக்களும், பசுமை வீடு கோரி 71 மனுக்களும், கல்வி உதவித்தொகை கோரி 7 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 39 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக 7 மனுக்களும், இதர கோரிக்கைக்காக 210 மனுக்களும் என மொத்தம் 383 மனுக்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் சார்பில் சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் குளத்தூர் வட்டத்திற்குட்பட்ட 1 பயனாளிக்கு மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கான ஆணையினையும், 3 பயனாளிகளுக்கு ரூ.3,99,208/- மதிப்பில் கடல் கடந்தவர்களின் மரண இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளும், மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில் 13 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும் என பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நிலம் எடுப்பு) திருமதி.மீராபரமேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**